# படைத்ததெல்லாம் தரவந்தோம்

படைத்ததெல்லாம் தரவந்தோம்
பரம் பொருளே உன் திருவடியில் ( 2 )
உன் நினைவு எல்லாம் பெயர் சொல்லும்
என் வாழ்வினிலே ஒளிவீசும்

(படைத்ததெல்லாம்)

**1**
உழைப்பினில் கிடைத்திட்ட பொருளெல்லாம்
உன்னதரே உந்தன் மகிமைக்கே ( 2 )
தந்தையே தயவுடன் ஏற்றிடுவாய் ( 2 )
தாழ்ந்து பணிந்து (தருகின்றோம்- 3 )

(படைத்ததெல்லாம்)

**2**
வாழ்வினில் வருகின்ற புகழெல்லாம்
வல்லவரே உந்தன் மாட்சிமைக்கே ( 2 )
கருணையின் தலைவா ஏற்றிடுவாய் ( 2 )
தாழ்ந்து பணிந்து (தருகின்றோம்- 3 )

(படைத்ததெல்லாம்)